**தலைப்பு 302: கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 16 யூன் 2020 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 17 யூலை 2020 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை வடிவமைத்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் ஆணைக்குழுவின் வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை உரிய வகையில் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) எனும் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளது என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டுச்சேரல், தவறான

ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் யாவும் செயற்படுத்தப்பட்டுள்ளன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 செலவின விடயங்களின் கூட்டுமொத்தம் ஒதுக்கீடு ரூபா. 1,935,000 இல் ரூபா. 390,519 ஆனது சேமிப்பாக காணப்படுகின்றது. இச்சேமிப்புக்களின் வீதமானது 13% இலிருந்து 70% வரையாக காணப்படுகின்றது. | முறையான முன் மதிப்பீடுகளை மேற்கொண்டு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். | இச் செலவின விடயங்களின் கீழ் செலவினங்கள் சரியான கட்டுப்பாட்டின் காணப்படுகின்றது. மற்றும் ஏதிர்பார்ப்பிற்கமைய செலவினங்கள் ஏற்படாமையினால் ஒதுக்கீட்டில் சேமிப்புக்கள் காணப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| (ஆ) 04 மூலதன செலவின விடயங்களின் தேறிய ஏற்பாட்டின் கூட்டுமொத்தம் ரூபா. 2,000,000 இல் ரூபா. 1,110,643 ஆனது சேகரிப்பாக காணப்படுவதுடன் 05/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கைக்கமைய 25 சதவீதம் கட்டாய சேமிப்பினைத் தவிர இச்சேமிப்புக்களின் வீச்சு 6 சதவீதம் முதல் 75 சதவீதம் வரை காணப்பட்டுகின்றது. | மேலே குறிப்பிட்டதன் படி | 05/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் 25 சதவீதம் கட்டாய சேமிப்பாக காணப்படுகின்றது. மற்றும் 07/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுச் செலவுகளை நிர்வகித்தல் மற்றும் நிதி ஒழுக்கத்தை பராமரித்தல் ஆகியறவற்றால் நிதி வழங்கல் சேமிக்கப்பட்டுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஆணைக்குழுவினால் பெறப்படும் முறையீடுகளை விசாரணை மேற்கொள்வதே இதன் முக்கிய பணியாகும், மேலும் 2019 ஆம் ஆண்டிற்கு முன்னர் பெறப்பட்ட 59 முறைபாடுகளும் மதிப்பாய்வு செய்யப்பட்டு மீளாய்வாண்டில் தீர்க்கப்பட்டிருந்தது. | முறையீட்டுகளை பரிசீலனை செய்வதனை துரிதப்படுத்தப்பட வேண்டும். | முறைப்பாடுகளை பரிசீலனை செய்வதற்கு தேவையான சரியான தகவல்கள் மற்றும் ஆவணங்கள் கூட்டுறவு சங்கத்தினால் உரிய முறையில் வழங்கப்படாமையினால் பதில்களை பெற்றுக்கொடுப்பதில் தாமதம் மற்றும் வருடத்தின் இறுதி மாதங்களில் பெறப்படும் முறைப்பாடுகளை உரிய ஆண்டிலேயே பரிசீலித்து முடிப்பதற்கான செயற்திட்டங்கள் காணப்படாமையினால் முறைப்பாடுகளை பரிசீலிப்பதில் காலதாமதம் காணப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டில் 44 முறைப்பாடுகள் ஆணைக்குழுவினால் பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் 34 முறைப்பாடுகள் மாத்திரமே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. | மேலே குறிப்பிட்டதன் படி | செயல்திட்டத்தை மேற்கொள்வதற்கு கூட்டுறவு சங்கங்களின் சிறப்பு சந்தர்ப்பங்களை பரிசீலிக்க முடியாததால், காலாண்டுகளுக்கு 5 முறைப்பாடுகள் என்ற அடிப்படையில் வருடத்திற்கு 20 முறையீடுகளைப் பெறும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. |
| (இ) மீளாய்வாண்டில் ஆணைக்குழுவினால் 44 முறைப்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டதில் 34 முறைப்பாடுகள் மாத்திரமே தீர்வு செய்யப்பட்டிருந்த போதிலும் நிர்வாக செயற்திட்ட கூற்றின் முன்னேற்ற அறிக்கையில் மீளாய்வாண்டில் 84 முறைப்பாடுகள் தீர்வு செய்யப்பட்டுள்ளதாக காட்டபட்டிருந்தன. | நிர்வாக செயற்பாடுகள் தொடர்பாக தயாரிக்கப்படும் முன்னேற்ற அறிக்கையில் சரியான தகவல்கள் உள்ளக்கப்பட வேண்டும். | நிர்வாக செயற்பாடு தொடர்பாக தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையில் சரியான தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும் தவறுதலாக 84 என குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறான தவறுகள் ஏற்படாத வகையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் வேண்டுமென உரிய உத்தியோகத்தருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. |

## 4 மனிதவள முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 23 ஆகவும் மற்றும் உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 18 ஆகவும் காணப்படுகின்றது. அதற்கேற்ப, பதவி வெற்றிடங்கள் 05 காணப்படுகின்றன. நிர்வாக அலுவலர் பதவிகளுக்கான ஊழியர்கள் 2017 நவம்பர் மாதம் முதல் ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்டதுடன், அவ் ஒப்பந்தமானது ஆண்டுதோறும் புதிப்பிக்கப்பட்டு வருகின்றது. | அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இந்த வெற்றிடங்களை நிரப்ப இணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், அரச சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் நிர்வாக அலுவலர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் அலுவலர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். |